பக்கங்கள் :ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 1 செவ்வாய்க்கிழமை (15.05.2007)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 169

# தனது தீர்வு யோசனையை சு.க. திருத்தவேண்டிய தேவையில்லை

## ஜனாதிபதி திட்டவட்டமான அறிவிப்பு

கொழும்பு,மே15

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனக்கென்று ஓர் அடையாளமாக, இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனை ஒன்றை முன்வைத்துள்ளது. வேறு அரசியல் கட்சிகளின் தேவை கருதி அதனைத் திருத்தப் போவதில்லை.

. இவ்வாறு மிகத் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான மஹிந்த ராஜபக்ஷ.

நேற்று நண்பகல் அலரிமாளிகையில் நடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்திற்கு ஜனாதிபதியே தலைமை வகித்தார். கட்சியின் தீர்வு யோசனை குறித்து மத்தியகுழு உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்திக்கொண்டிருந்த ஜனாதிபதி, ஒரு கட்டத்தில் ஒலிவாங்கியையும் தூக்கிக்கொண்டு ஆவேசத்துடன் எழுந்தார்.

''இது சுதந்திரக்கட்சியின் தெளிவான தீர்வுத்திட்டம். கட்சியின் நிறைவேற்று சபையின் அனுமதியுடன் இந்த யோசனைகளை முன்வைத்துள்ளோம். பிறரது விருப்பங்களுக்காக இதனைத் திருத்த வேண்டிய அவசியம் இல்லை'' - என்று உணர்ச்சிவசப்பட்டு உரத்துக் கூறினார்.

''சர்வகட்சி மாநாட்டில் எல்லா கட்சிகளினதும் யோசனைத் திட்டங்களுடன் சேர்த்து இதனையும் ஆராயலாம். அப்போது வேண்டுமானால் வேறு கட்சிகளின் யோசனைகளுக்கு ஏற்ப - தேவைகளுக்கு அமைவாக - திருத்தங்களைச் செய்து ஒரு பொதுவான திட்டத்தைத் தயாரிக்கலாம். ஆனால், எமக்கொன்று

(06ஆம் பக்கம் பார்க்க)

## முனைப்பகுதி மக்கள் நேற்றிரவு பதற்றம்

நெல்லியடி, மே 15

நேற்று மாலை 7 மணியிலிருந்து 7.45 மணிவரை பருத்தித்துறை முனைப் பகுதி இராணுவத்தினர் பரா வெளிச்சம் பாய்ச்சி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து பயிற்சியில் ஈடுபட்டனர்.

இதன் சரியான விவரம் எதுவும் தெரியாததால் மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர். மக்கள் அங்குமிங்கும் அவசர அவசரமாக ஓடினர். அதனைக் கண்ட படையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். தாம் பயிற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவித்தனர். அதன் பின்னர் இரவு எட்டு மணிக்கு மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பினர். (அ-115)

## மன்னாரில் சிப்பாய் பலி

கொழும்பு, மே 15

மன்னார் மாவட்டம் மடு முன்னரங்க காவலரண் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சண்டையில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சண்டையில் 7 விடுதலைப் புலிகளும் கொல்லப்பட்டனர் என்று தேசிய

(06ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக சமூகத்தினருக்கு மரண தண்டனை எச்சரிக்கை

### பாடசாலை மாணவர் பகிஷ்கரிப்புத் தொடர்கிறது

யாழ்ப்பாணம்,மே15

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் நேற்றுக்காலை ஒட்டப்பட்டிருந்த அச்சுறுத்தல் சுவரொட்டிகளால் பல்கலைக்கழக மாணவ்ர்கள், விரிவுரையாளர்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் சில பீடங்களைக் குறிப்பிட்டு பயங்கரவாதச் செயல்களுக்கு உதவும் மாணவர்கள், ஊழியர் எண்ணிக்கை எழுதப்பட்டு அவர்களுக்கு இறுதி எச்சரிக்கை விடுக்கும் வகையில் அந்தச் சுவரொட்டிகள் காணப்பட்டன.

'மரண தண்டனை வழங்கப்பட வேண்டியவர்கள்' எனக் குறிப்பிட்டு பீடங்களின் பெயர்களும் அவற்றைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கையும் அந்தச் சுவரொட்டியில் காணப்பட்டன.

சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டிருந்த பீடங்களின் பெயர்களும் அவற்றைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கையும் வருமாறு: -

- ★ கலை, நுண்கலைபீடம் - 86 பேர்
- ★ முகாமைத்துவ வணிகபீடம் -67 பேர்
- ★ விஞ்ஞானபீடம் - 22 பேர்
- ★ மருத்துவபீடம் - 41 பேர்
- ★ சித்தமருத்துவபீடம் -70 பேர்
- ★ ஊழியர்கள் - 24 பேர்

'நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு' என்ற பெயர் அடியில் குறிப்பிடப்பட்டிருந்த அந்த சுவரொட்டிகளால், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும்

(06ஆம் பக்கம் பார்க்க)

## மார்ம விமானம் தரையிறங்கியதாகத் தகவல்; கேகாலையில் பொலிஸார் தீவிர தேடுதல்

கொழும்பு,மே 15

கேகாலைப் பகுதியில் மர்ம விமானம் ஒன்று மலைப்பகுதியில் தரையிறங்குவதுபோல தாழப் பறந்ததைக் கண்டதாக சிவிலியன் ஒருவர் வழங்கிய தகவலை அடுத்து நேற்று பொலிஸார் அந்த மலைப் பிரதேசத்தில் தீவிர தேடுதல்களை மேற்கொண்டனர்.

கேகாலை பொலிஸ் பிரிவில் புலத்கோபிட்டிய என்ற மலைப் பகுதியை விமானம் ஒன்று தாழப்பறந்து கடந்து சென்றதை நேற்று அதிகாலை 4.00 மணியளவில் கண்டார் என்று அந்த சிவிலியன் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

பொலிஸ் அவசர பிரிவின் '116' என்ற தக்வல் சொல்லும் தொலைபேசி இலக்கம் ஊடாகவே குறிப்பிட்ட சிவிலியன் இந்த மர்ம விமானம் பற்றிய தகவலை வழங்கினார். இதனையடுத்து கேகாலை பொலிஸ் பிரிவில் குறிப்பிட்ட மலைப் பகுதியில் விசேட தேடுதல் நேற்றுப்பகல் முழுவதும் மேற்கொள்ளப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

புலத்கோபிட்டிய மலை மீது விமானம் பறப்பது பற்றிய தகவலை வழங்கிய பிரஸ்தாப சிவிலியன், தனது பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றையும் பொலிஸாரிடம் தெரிவித்தார்

(06ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்களை விடுதலை செய்யவேண்டும்; போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவோம்

### தமிழ்க் கூட்டமைப்புச் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,மே15

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்கள் அடுத்தடுத்து கடத்தப்பட்டு காணாமற்போயிருக்கும் நிலையில் அவர்களை விடுவிக்கக்கோரி மாணவர் சமூகம் மேற்கொண்டுவரும் அமைதி வழிப் போராட்டங்களுக்கு சகல தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டிருக்கிறது.

கடத்தப்பட்ட மாணவர்களை விடுவிக்க் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்காததைத் தொடர்ந்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராஜா எம். பி. விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சென்ற 04.05.2007 இரவு புனித பரியோவான் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் ஆயுததாரிகளினால் கடத்தப்பட்டு இன்றுவரை காணாமல்போயுள்ளனர்.

ஊரடங்கு உத்தரவு நேரத்தில் மோட்டார் சைக்கிள்களில் ஆயுதங்களுடன் வந்தவர்களே தங்கள் முன்னிலையில் தங்களையும் அச்சுறுத்திவிட்டு இம்மாணவர்களைக் கடத்திச் சென்றுள்ளனர் என மாணவர்களின் பெற்றோர் முறையிட்டுள்ளனர்.

இந்த மாணவர்கள் 2007 இலும், 2008 இலும் உயர்தர வகுப்புத் (G.C.E. A/L) தேர்வுக்குத் தோற்றவுள்ள 17வயது, 18 வயது மாணவர்கள். இத்தகைய கைது, கடத்தல், காணாமல் போதல், கொலைகள் முதலான சம்பவங்கள் நாளாந்த நிகழ்ச்சிகளாகி விட்டன.

அச்சத்தினாலும், மன உளைச்சலினாலும் ஏற்கனவே அவலப்படுகின்ற மாணவர்கள், பெற்றோர், ஆசிரிய சமூகத்தினரும்

(06ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் பாதுகாப்பு உறுதியற்ற நிலையில் கிழக்கில் மீள்குடியமர்வு நேற்று ஆரம்பம்!

### உதவி அமைப்புகள் கவலை

கொழும்பு,மே 15

கிழக்கில் படையினரால் அண்மையில் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை என்று ஐ.நா. அமைப்புகள் உட்பட உதவி நிறுவனங்கள் விடுத்த எச்சரிக்கையைப் புறக்கணித்து விட்டு, மீள்குடியமர்வு நடவடிக்கையை அரசு ஆரம்பித்துள்ளது.

கிழக்கில் விடுதலைப் புலிகள் வசம் இருந்து அண்மையில் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் சுமார் ஒரு லட்சம் மக்கள் தமது பாதுகாப்புத் தொடர்பான அச்சத்தை எதிர்கொண்டுள்ளனர் என்று உதவி நிறுவனங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளன.

''பாதுகாப்பும் கண்ணியமும் உறுதிப்படுத்தப்படாத சூழ்நிலையில் மக்களை மீளக்குடியமர்த்தத் திட்டமிடப்படுவது மனிதாபிமான சமூகத்திற்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது'' என்று ஐ.நா. அமைப்புக்களையும் உள்ளடக்கிய உதவி நிறுவனங்களின் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பக் கூடியளவிற்கு நிலைமைகள் முன்னேற்றமடையவில்லை என்பது குறித்துத் தாம் கவனமெடுத்துள்ளதாகவும் உதவி அமைப்புக்கள் கூறியுள்ளன.

எனினும் உதவி அமைப்புக்களின் இந்த எச்சரிக்கை மற்றும் கவலையைப் புறக்கணித்துவிட்டு இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தும் பணியை அரசு நேற்று ஆரம்பித்துள்ளது.

வெல்லாவெளிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட புன்னைக்குடா, கோயில் போரதீவு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நேற்றுக் காலை 9 பஸ்களில் அவர்களது சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## என்ன... ஊடக சுதந்திரம் இல்லையா...?

## பத்திரிகைகள் என்னைத் தினமும் விமர்சிக்கின்றன அதைப் பொறுத்துக்கொண்டுதானே இருக்கிறேன்!



கொழும்பு, மே 15

''நாட்டில் ஊடக சுதந்திரம் இல்லையா? யார் சொன்னது? பத்திரிகைகள் எல்லாம் என்னைத் தினமும் விமர்சிக்கின்றனவே. அதற்கு நான் ஏதாவது கேட்டேனா? பொறுத்துக்கொண்டுதானே இருக்கிறேன். பிறகேன் ஊடக சுதந்திரம் இல்லை என்று சொல்கிறார்கள்...?''

- இப்படிக் கேள்விகளை அடுக்கியிருக்கிறார் நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இளம் பிக்குமார்களுக்கான சமய வைபவம் ஒன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்துகொண்டு பேசினார் ஜனாதிபதி. அதன்போதே ஊடகங்கள் தொடர்பான தனது ஆதங்கங்களை ஜனாதிபதி வெளிப்படுத்தினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

அனைத்து இன மக்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது. புலிப் பயங்கரவாதிகள் சிங்கள மொழிபேசும் தமிழ் அரசியல்வாதிகளையும் தமிழ்பேசும் சமய குருமார்களையும் படுகொலை செய்துவருகின்றனர். இந்த நிலைமையை சில அரசியல் தலைவர்கள்

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராம மட்டத்தில் பயிற்சிப் பட்டறை

தென்மராட்சி பிரதேச கிராம மட்டத்திலான 'கமநெகும' பயிற்சிப் பட்டறை நாளை தொடக்கம் ஐந்து நாள்கள் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் தினமும் 11 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு இப்பட்டறை நடத்தப்படும்.

யாழ். செலயலகத் திட்டமிடல் பிரிவினால் இப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படவுள்ளன. (207)

## மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு மாலை நேர வகுப்பு

சுழிபுரம், மே 15

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கென கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இந்நிதி மூலம் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் மாலை நேர வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இந்த வகுப்புகளை நடத்துவதற்கென விசேடமாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு வேதனம் வழங்கப்படவுள்ளதாகவும் -

இந்த மாதத்திலிருந்து இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-28)



## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வலயக் கல்விப் பணிமனையில் முதன்மை ஆசிரியராக கடமையாற்றும் *நி. முருகானந்தன்* அவர்களின் பாசமிகு தாய்

**அமரர் நித்தியானந்தன் செல்லம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக் கழகம்,
வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்.
(60548)



## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வலயக் கல்விப் பணிமனையின் முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர்

**அமரர் சண்முகம் வீரசிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக் கழகம்,
வலயக் கல்வி அலுவலகம்,
வலிகாமம்.
(60547)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
*மு. ஜெயவனிதா* அவர்களின் அன்புத் தாய்

**திருமதி செ. முருகேசு அவர்கள்**

காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மனை வேண்டுகிறோம்.

*யா/ வேலணை கிழக்கு மகா வித்தியாலயம், வேலணை.*
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(60546)

## காணி விற்பனைக்கு

**மல்லாகத்தில், கே.கே.எஸ் வீதிக்கு அண்மையில் கிணற்றுடன் கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**தொடர்பு: 0777 242198**

(60586)

## விற்பனைக்கு

**P4 கணனி ஸ்கானர் DVD றயிற்றருடன் ரூபா 75, 000 இற்கு விற்பனைக்குண்டு.**
**ஸ்ரீராம் கொண்டா ஜெனறேற்றர் ரூபா 80, 000 இற்கு உடன் விற்பனைக்குண்டு.**
**நெல்லியடி. தொ.பே. 0777156260.**

## மரண அறிவித்தல்கள்



### கந்தர் அப்புத்துரை

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் அப்புத்துரை நேற்று (14.05.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - சிவக்கொழுந்து தம்பதியரின் புதல்வனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் விக்கினேஸ்வரன் (கனடா), புவனேஸ்வரி (கிளிநொச்சி), நந்தகுமாரி (கனடா), சிவகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோபாலசிங்கம் (கிளிநொச்சி), விக்கினேஸ்வரன் (கனடா), கனகராசா (கனடா), சுதர்சனா (கனடா) ஆகியோரின் மாமனும் தேனுசா, மதுராஜ், அகில்ராஜ், யனுசா, லேனுசா, யானுசா, நிருசா, சாரதி, நிருசன், அஸ்வினி, அக்சலா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சேதுராசா மற்றும் கணபதிப்பிள்ளை, வைத்திலிங்கம், பொன்னம்மா (கனடா), காலஞ்சென்ற வள்ளியம்மை மற்றும் பார்வதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாதகல்.* (60588)
தகவல்:
**மனைவி (அ.சரஸ்வதி).**



### முருகேசு செல்லாச்சி

எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் சரசாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்லாச்சி 13.05.2007 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் முருகேசுவின் அன்பு மனைவியும் ஜெயரத்தினம் (மேசன்), ஜெயவதனா (லண்டன்), ஜெயரதன் (பிரான்ஸ்), ஜெயரூபன் (பிரான்ஸ்), ஜெயவனிதா (ஆசிரியை - வேலணை மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் சறோஜினிதேவி, துரைராசா (பிரான்ஸ்), கஜிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் துசாந்தன், தர்சிகா, தனுசாந்த், நிவேதிகா, நிருத்திகா, நிருஷியா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2007) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சரசாலை தெற்கு,*
*சரசாலை.* (60591)
தகவல்:
**மு.ஜெயரத்தினம்** (மகன்).

### சேனாதிராஜா செந்தில்குமரன்



வல்வெட்டி, நித்தியானந்த வாசம், வல்வெட்டியைச் சேர்ந்த சேனாதிராஜா செந்தில்குமரன் 11.05.2007 இல் கனடாவில் காலமானார்.

அன்னார் அமரர் சேனாதிராஜா நித்தியானந்த செல்வியின் அன்பு மகனும் அமரர் செல்லையா - சரஸ்வதியின் மருமகனும் தவமலரின் அன்புக் கணவரும் லக்ஷன், சயிதா ஆகியோரின் தந்தையும் செந்தில் செல்வன், செந்தில் குருபரன், செந்தில்காருண்ணியன் (கனடா), செல்வரஞ்சினி (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரனும், திருமதி ஆனந்தசிவா விக்னேஸ்வரி (வெஸ்டன் ஜூவலரி - கொழும்பு), திருமதி பரமசிவம் சிவனேஸ்வரி (சங்கானை), செல்வநாதன் (த சீப் சென்டர் தலவாக்கலை), கோபாலசிங்கம் (நியூ சீப்சைட் தலவாக்கலை), செல்வரஞ்சிதம், பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), கணேசமூர்த்தி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மொன்றியல், கனடாவில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஆனந்தசிவா**
வெஸ்டன் ஜூவலரி, இல. [illegible]
கொழும்பு - 11
(சி-52418)




அன்புளநீர் அகமெல்லாம் பொங்கப் பொங்க அறமெழுந்து பெருஞ்சேனை ஆற்ற ஆற்றத்
தொண்டு செய்பல அன்பர் தோன்றத் தோன்ற [illegible]
கண்டுவரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப கடி அமுத சுரபியினால் [illegible]
கொண்டு பசி தீர்த்தவர்கள் கோடி கோடி [illegible] காலமெல்லாம் வாழி வாழி

**நயினாதீவு – ஸ்ரீ நாகபூஷணி**

# அமுதசுரபி அன்னதான சபை

*Reg. No. S. 236*

**2007 ஆரம்பம் - 1960 (வரைவுள்ளது) 2007**

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் திருவருளினால் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுத சுரபி அன்னதான சபை 'அமுத சுரபி' என்னும் பெயர் தாங்கிய மணி மண்டபத்தின் கண்ணே ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினை செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 47 ஆவது ஆண்டில் பிரவேசிப்பதில் மன மகிழ்வெய்துகின்றோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த.சேவையெனக் கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள் உதவி செய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச் சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் நற்சேவைத் தொண்டர்களுக்கும் அமுத சுரபி மண்டபத்துக்கு வந்து பணி செய்யும் அடியார்களுக்கும் தத் தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும் அன்னதானத் தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெற பணம், பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவிவரும் தருமசீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்து சபையின் மனமுவந்து பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாண்டு ஆனி மாதம் 2ஆம் நாள் (16.06.2007) சனிக்கிழமை அம்பிகையின் உயர்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி மாதம் 11ஆம் நாள் (25.06.2007) திங்கட்கிழமை திருமஞ்சத் திருவிழாவும் மறுநாள் (26.06.2007) பூத்தண்டிகைத் திருவிழாவும் ஆனி மாதம் 14ஆம் நாள் (28.06.2007) சப்பரத் திருவிழாவும் ஆனி மாதம் 15 ஆம் நாள் (29.06.2007) வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் ஆனி 16ஆம் நாள் சனிக்கிழமை பூரணை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று ஆனி மாதம் 17ஆம் நாள் (01.07.2007) ஞாயிற்றுக்கிழமை தெப்பத் திருவிழாவுடன் நிறைவுபெற திருவருள் பாலித்துள்ளது. அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு சிறந்த முறையில் 16 நாள்களும் இரவு பகல் அன்னதானம் வழங்க சபை தீர்மானம் செய்துள்ளது. எனவே தரும கொடை வள்ளல்களான உங்களிடம் எமது சபையால் நியமிக்கப்பெற்ற உத்தமத் தொண்டர்கள் 14.05.2007 தொடக்கம் 30.06.2007 ஆம் திகதிவரை வருவார்கள். அவர்களிடம் நீங்கள் வழங்கும் பணம், பொருள் முதலியவற்றைக் கையளித்து சபையின் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நேரடியாக பணம் கொடுக்க விரும்புவோர் Amuthasurabhi, Commercial Bank கணக்கு இலக்கம் 1247985001 Peoples Park கட்டடம் Pettah அல்லது இலங்கை வங்கி ஊர்காவற்றுறை வேலணை ந.க/கு இல. C 3087 எனும் விலாசத்துக்கு அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அம்பிகையின் திருப்பதியிலே அடியார்கள் தங்கிநின்று தருசிப்பதற்காக நவீன வசதிகளுடன் கூடிய அமுதசுரபி அன்னபூரணி இறைபயணிகள் இல்லமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதனை மன மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

இங்ஙனம்
**கு.சாந்தலிங்கம்**
**செயலாளர்**
அமுதசுரபி மண்டபம்,
பிரதான சாலை, நயினாதீவு - 2
தொ.பே.இல. 0602213575.
(சி-52417)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 90இல் இடம்பெயர்ந்தவர்களுக்கான
# வீட்டுத்திட்டம் பூர்த்தியடைந்தபோதும் மக்கள் இன்னும் குடியமர்த்தப்படவில்லை

உடுப்பிட்டி, மே 15

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியின் கரையோரப் பிரதேசங்களில் வசித்த - ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட- மக்களுக்கென அரச சார்பற்ற நிறுவனத்தால் அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டம் நிறைவடைந்துள்ளது. ஆயினும் அவ்வீடுகளில் மக்களைக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பாதிக்கபட்டவர்கள் முறையிடுகின்றனர்.

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு தொண்டைமானாறு, காற்றாடிவெளியில் 70 வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு ஐ.ஓ.எம் நிறுவனம் முன்வந்தது. கடந்த ஆண்டு இறுதியில் வீட்டுத் திட்டமும் நிறைவடைந்தது.

எனினும் பல மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை மக்களைக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கை எதுவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் முன்னெடுக்கப்படவில்லை.

அந்த மக்கள் தொடர்ந்தும் தற்காலிகக் குடியிருப்புகளில் சிரமங்களுக்கு மத்தியிலேயே வாழ்வதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (202-155)

### குருநகர் மத்திய மருந்தகம் வைத்தியசாலையாகத் தரமுயர்வு

குருநகர், மே 15

குருநகர் மத்திய மருந்தகம், மத்திய சுகாதார அமைச்சின் புதிய சுற்றறிக்கைக்கு அமைய குருநகர் பிரதேச வைத்தியசாலையாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்தது.

பல மாதங்களாகக் குருநகர் மத்திய மருந்தகமும் பிரசவ விடுதியும் இயங்காமல் இருந்தன. சுகாதாரத் திணைக்களத்தின் நடவடிக்கையை அடுத்து அண்மையிலேயே இவை இயங்க ஆரம்பத்தமை குறிப்பிடத்தக்கது. (202-51)

## உணவு வகைகளைப் பரிசோதிக்க வடமராட்சியில் ஆய்வுகூடம் இல்லை

### சுகாதார அதிகாரி கவலை தெரிவிப்பு

கரவெட்டி,மே15

மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய உணவு வகைகளைக் கண்டறிவதற்கு வேண்டிய ஆய்வுகூடமும் தேவையான உபகரணங்களும் தம்மிடம் இல்லை என வடமராட்சி சுகாதாரப் பிரிவு அதிகாரி கவலை வெளியிட்டுள்ளார்.

வடமராட்சியில் பொதுச்சந்தைகளிலும் தனியார் வர்த்தக நிலையங்களிலும் மனித பாவனைக்கு ஒவ்வாத மருந்துகள் தெளிக்கப்பட்ட மரக்கறிகள் மற்றும் பழவகைள் என்பன விற்பனை செய்யப்படுகின்றன. இது தொடர்பாகப் பல முறைப்பாடுகளும் எமக்குக் கிடைத்துள்ளன.

எனினும் நாம் இக்குற்றச்சாட்டை சுகாதார பூர்வமாக நிரூபித்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய ஆய்வு கூட வசதிகள் எம்மிடம் இல்லை. இது எமது சேவைக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது - என்றார் சம்பந்தப்பட்ட அதிகாரி. (202-70)

# யாழ்.பல்கலை.நுண்கலைப்பீடத்திற்கு மேலும் 53 மாணவர்கள் தெரிவாகினர்

யாழ்ப்பாணம், மே 15

யாழ்.பல்கலைக்கழகத்தில் 2006/2007 கல்வியாண்டில் சங்கீதம், நடனம் ஆகிய கற்கை நெறிகளைப் பயில்வதற்கு மேலதிகமாக 53 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்களை யாழ்.பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை விளம்பரப் பலகையிலும் கிளை www.jfn.ac.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன் தங்கள் பதிவை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. தபால் மூலம் பதிவு செய்பவர்கள் 021 222 2006 என்ற தொலைநகல் இலக்கத்திற்கு தமது விவரங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர், சுட்டெண் விவரம் வருமாறு:

ஜி.கிருஷாந்தி (3415546), ஜே.சோபியா (3388336), எம்.கோஜலா (3339017), ஏ.நர்மதா (3418863), எஸ்.ஜமுனா (3419169), எல்.சுஜாந்தினி (3422313), ரி.சுகிர்தா (3394964), பி.யாழரசி (3345530), எஸ்.சான்யா (3331970), ரி.தாக்ஷாயினி (3340732)

ரி. ஜீவிதா(3421589), கே.மதுமதி (3400409),எஸ்.ஜான்சா. (3331962), எஸ்.உசானந்தினி (3440613), ஆர்.பபிதா (3345564), பி.சிவதர்சினி (3396061), பி.மயூரி (3400425), கே.டெய்சிகா (3394697), ஜே.சின்னத்துரை (3357961), எம்.தாட்சாயினி (3400336)

எச்.கீர்த்திகா (3352404), கே.குருசாமி (3422011), ரி.கோபிகா (3400468), கே.செந்தில்நாயகி (3400301), ஜே.ஜி.ஈ.நிலோஜினி (3352943), எஸ்.கஜேந்தினி (3331938), எம்.டி மார்க்கண்டு (3415597), எஸ்.கார்த்திகா (3400492), ரி.ஜென்சி (3352552), ஜே.இராசதுரை (3296210)

கே.நிரோஜனா (3358020), எல்.பரமசிவன் (3310248), எஸ்.நிரோஜினி (3400948), என்.சிவஞானசுந்தரம் (3379558), வி.பூபாலசிங்கம் (3375170), ஜி.சுகன்யா (3352374), ஜே.நிலக்சனா (3364666), எம்.இருதயதாசன் (3344754), பி.ராஜதுரை (3415309), ஏ.எம். விநாயமூர்த்தி (3328899), எஸ்.இளவரசி (3402320), ஆர்.வாசுதேவன் (3421953)

ஏ.அகிலன் (3438635), ரி.முருகேசம்பிள்ளை (3307182), ஜி.லாவண்யா (3439216), எஸ்.சோமசுந்தரம் (3383954), ரி.தர்மினா (3309657), எஸ்.ஏ.நிருஜா (3413268), கே.நீரஜா (3327612), ரி.யசோபாரதி (3400980), கே.நாகேந்திரதாஸ் (3358275), எஸ்.டிஸ்பரஞ்சி (3406784), எஸ்.பாலனோஜா (3334724)

### மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 15

யாழ்.ஐயனார் கோயில் வீதியில் உள்ள லங்கா மண்எண்ணெய் விநியோக நிலையத்தில் மே மாதத்திற்கான விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

ஜே/97, ஜே/98, ஜே/99, ஜே/100, ஜே/101, ஜே/125, ஜே/127, ஜே/128 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கே இந்த விநியோகம் இடம்பெற்று வருகின்றது. (1-203)

## கட்டடப் பொருள்கள் விலையேற்றம்: வீட்டுத்திட்டப் பயனாளிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,மே15

குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உலக வங்கி வீட்டுத்திட்டத்தின் பயனாளிகள் உரிய விலைகளில் கட்டடப் பொருள்களை பெறமுடியாது பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வீட்டுத்திட்டங்கள் இடைநடுவில் இருக்கும் நிலையில் அவற்றைக் கட்டி முடிப்பதற்கு வேண்டிய சிமெந்து, மணல், இரும்புக் கம்பி மற்றும் கூரைத்தகடுகளைப் பெறமுடியாத நிலையில் பயனாளிகள் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வீட்டுத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி மூலம் நிர்ணயிக்கப்பட்ட விலையில் பொருள்களைப் பெறமுடியவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கட்டடப் பொருள்களின் விலைகள் தற்போது பலமடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றன.

இவ்வாறான விலைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்து வேலைத்திட்டங்களை மேற்கொண்டால் ஒதுக்கப்பட்டுள்ள நிதி வீட்டைக் கட்டி முடிப்பதற்கு போதுமானதாக இருக்காது.

இந்நிலையில் கட்டடப் பொருள்களை கட்டுப்பாட்டு விலையில் பெற்றுத் தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்-

தனியாரிடம் பொருள்களைக் கொள்வனவு செய்து வீட்டுத்திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியாது என்றும்- பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர். (203- 68)



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் "பிஸினஸ் கிளப்" காப்புறுதியினை பெற்றிருந்த வாடிக்கையாளர் ஒருவருக்கு திருட்டுச் சம்பவத்தினால் ஏற்பட்ட இழப்பிற்கான நட்டஈட்டுக் கொடுப்பனவாக 3லட்சத்து 5ஆயிரத்து 352 ரூபா வழங்கப்பட்டது. தொகைக்கான காசோலை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நெல்லியடிக்கிளை விற்பனை முகாமையாளர் கு.ஆறுமுகன் வழங்குவதைப் படத்தில் காணலாம். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களான கை.சதீஸ், து.அஜித்குமார், ம.விஜிதரன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

### உள்ளூராட்சிச் சபைகளுக்கு பொதுசன தொடர்பு அதிகாரி நியமனம்

யாழ்ப்பாணம், மே 15

சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் பொதுசனத் தொடர்பு அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் கேஷியன் ஹேரத் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு வருகை தரும் மக்களுக்கு சிறந்த முறையில் வரவேற்பளிக்கப்பட்டு பதில் வழங்கப்படுவதில்லை என்று முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்தே இந்த அதிகாரிகளை நியமிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இப்பதவிக்கு பட்டதாரிகளே நியமனம் செய்யப்படவுள்ளனர். (202-95)

### பரீட்சை நடந்து ஒன்றரைவருடம்
## இன்னும் நேர்முகம் நடத்தப்படவில்லை பாதிக்கப்பட்ட சிறுபணியாளர்கள் கவலை

யாழ்ப்பாணம், மே 15

சிறு பணியாளர்களை முகாமைத்துவ உதவியாளர் தரம் III இற்கு உள்வாங்குவதற்கான நேர்முகப்பரீட்சை இதுவரை நடைபெறவில்லை. இதனால் யாழ்ப்பாணம், வன்னி, மாவட்டங்களைச் சேர்ந்த 31 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

உள்ளூராட்சி மற்றும் அரச திணைக்களங்களில் பணியாற்றும் சிறுபணியாளர்களை முகாமைத்துவ உதவியாளர்களாக சேர்த்துக் கொள்வதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இதற்கான பரீட்சை கடந்த ஆண்டு ஜனவரியில் நடத்தப்பட்டது.

இப்பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் 30 பேர் முகாமைத்துவ உதவியாளர்களாகத் தரம் உயர்த்தப்படலாம்.

ஆனால், இதுவரை உரிய நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். (202-95)

## செய்திச் சரம்

### முதுமாணிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 15

யாழ்.பல்கலைக்கழகமுதுமாணி அபிவிருத்திக் கற்கை நெறிக்கான பரீட்சைகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகும் என உயர்மட்டப் பீடாதிபதிகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

முதுமாணி அபிவிருத்தி, முதுமாணி பிராந்தியம், முதுமாணி சனத்தொகை, பட்டப்பின் நூலகத் தகவல் விஞ்ஞானம், பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளுக்கான பரீட்சைகளே நடைபெறவுள்ளன.

பரீட்சை அனுமதி அட்டைகளை நேற்று திங்கட்கிழமை தொடக்கம் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-95)

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஊழியர்களுக்குக் கொடுப்பனவு

யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உத்தியோகத்தர், ஊழியர்களுக்கு இரண்டு மாதங்களுக்கான வேதனம் வழங்கப்படவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் சி.சிவப்பிரகாசம் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருடன் கலந்துரையாடியதையடுத்து ஜனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்களுக்குரிய வேதனம் வழங்கப்படவுள்ளது.

வேதனங்களுக்குரிய காசோலை வங்கிக்கு அனுப்பட்டுள்ளன எனவும் நாளை புதன்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையில் வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபையில் கடமையாற்றிய 60 இற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஏ-9 வீதி மூடப்பட்டதால் யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(203-207)

### பிரதம தபாலதிபர் நியமனம்

நல்லூர், மே 15

யாழ்ப்பாணம் பிரதம தபாலதிபராக கே.துரைசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். பிரதம தபாலதிபராக கடமையாற்றிய கேசிவராசா ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து மேற்படி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

### கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவு

வலி.தென்மேற்கு, மே 15

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் அங்கத்துவ சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள், பணியாளர்களின் பிள்ளைகளுக்கு 2006ஆம் ஆண்டிற்கான கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்படவுள்ளது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை போன்றவற்றில் சித்தி பெற்றவர்கள் மற்றும் பட்டதாரிகள் ஆகியோருக்கு இந்த ஊக்குவிப்பு நிதி வழங்கப்படவுள்ளது.

இவை தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாக மேற்படி கொத்தணி முகாமையாளர் க.சுதாகரன் தெரிவித்தார். (203-135)

### தென்மராட்சி மாணவர்களிடையே தேவாரப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 15

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 10ஆம், 11ஆம் தரங்களில் கல்வி கற்கும் மாணவரிடையே தேவாரம் பண்ணோடு பாடுதல், எழுதுதல் ஆகிய போட்டிகள் விரைவில் நடத்தப்படவுள்ளன.

தரம் 10 மாணவர்கள் புதிய பாடப்பரப்பிலும், தரம் 11 மாணவர்கள் தரம் 10 பழைய பாடப்பரப்பிலும் பாடல்களை மனனம் செய் தல் வேண்டும்.

மேற்படி போட்டிகளை பாடசாலை மட்டத்தில் நடத்தி ஒவ்வொரு வகுப்பிலும் தெரிவு செய்யப்பட்ட மாணவரை வலய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு இன்று செவ்வாய்க்கிழமை அனுப்பி வைக்குமாறு கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகம் தெரிவித்துள்ளார். (202-207)

## சமய சந்நிதிகளில்

திருநெல்வேலி சிவன்கோவில் தேர்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். நாளை புதன்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெறும். (1-111)

* * *

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆலயத் தேர்த்திருவிழா இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும். தீர்த்தத்திருவிழா நாளை புதன்கிழமை 7.45 மணிக்கு நடைபெறும். (100)

* * *

நவாலி ஸ்ரீ சிந்தாமணிப்பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் இடம்பெறும். தீர்த்தத் திருவிழா நாளை இடம்பெறும். (202-100)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற
உப அதிபர்
திருமதி மகாலிங்கம் சோபனாதேவி
அவர்களின் அன்புக் கணவர்

## சதாசிவம் மகாலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கோக்குவில்
ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.



ஜெய் குருதேவ்
யாழ்ப்பாணத்தில்
இன்று ஆரம்பம்

## வாழும் கலைப் பயிற்சி

பயிற்சி நாள் : 15.05.2007 தொடக்கம் 20.06.2007 வரை
இடம்: கம்பன் கோட்டம், நல்லூர் பின் வீதி.
நேரம்: காலை 6.30 மணி அல்லது பிற்பகல் 3 மணி
அன்பில் மலருங்கள் உங்களை உணருங்கள்
அனைவரும் வருக.

தொ.பே: 0779059549
0777250879
0779749346 (60522)

மேலும் விவரங்களுக்கு,
வாழும் கலை அறநிறுவனம்,
யாழ்ப்பாண மையம்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்களான
திருமதி நளாயினி சந்திரசேகரன்,
திருமதி சுலோஜினி தர்மகுணபாலசிங்கம்
ஆகியோரின் அன்புத் தாய்

## அமரர் நித்தியானந்தன் செல்லம்மா

அவர்கள் அமரத்துவமடைந்ததையிட்டு ஆறாத்துயரில் இருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.
(60519)

# மரண அறிவித்தல்

## சின்னையா விசுவரத்தினம்

*(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)*

யாழ்.நல்லூர் வடக்கு விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் வவுனியா, தோணிக்கல்லை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னையா விசுவரத்தினம் அவர்கள் 13.05.2007 ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-தங்கம்மா தம்பயினரின் மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் யோகம்மா, இராசலட்சுமி காலஞ்சென்ற மகேஸ்வரி, சற்குருநாதபிள்ளை (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் விஜிதா, விமலா, வினிதா, ஜெயரூபன், நந்தினி ஆகியோரின் அருமைத் தந்தையும் இராசேந்திரன் (இந்தியா), றஞ்சன் (பிரான்ஸ்), சுந்தரலிங்கம் (கனடா) ஆகியோரின் மாமனும் இலட்சுமிதேவி, யோகநாதன் (இ.போ.ச. கோண்டாவில்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (14.05.2007) திங்கட்கிழமை அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று தோணிக்கல் மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை நண்பர்களும் உறவினர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.10, மேட்டுத்தெரு, (60522)
தோணிக்கல், வவுனியா.

தகவல்:
சி.சற்குருநாதபிள்ளை (ரகோநாதன்).

## தவறிவிட்டது

ராஜேந்திரம் லக்கீதா என்பவருடைய விசேட அடையாள அட்டை 0902048234 02.05.2007 அன்று யாழ்.மகளிர் இந்துக் கல்லூரிக்கும் பிறவுண்றோட் அம்பகர் வீதிக்குமிடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 021 4590178 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 30 வயதுடைய மணமகளுக்கும் 40 வயதுடைய மணமகனுக்கும் தகுந்த மணமக்கள் தேவை.
தொடர்பு: விளம்பர இல. 2970, மே/பா உதயன்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## பல்கலைக்கழக அனுமதி கல்வியாண்டு - 2006/2007

*மேலதிக அனுமதி - சங்கீதம், நடனம்*

2006 க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து 2006/2007 கல்வியாண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சங்கீதம், நடனம் ஆகிய கற்கைநெறிகளைப் பயில்வதற்காக மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட (சங்கீதம் - 18, நடனம் - 35) மாணவர்களுக்கான அனுமதிக் கடிதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப் பட்டியலை யாழ்.பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை விளம்பரப் பலகையிலும் www.jfn.ac.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் 26.05.2007 இக்கு முன் தங்கள் பதிவை யாழ்.பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தபால் மூலம் பதிவு செய்பவர்கள் தங்கள் பெயர், சுட்டிலக்கம், கற்கைநெறி, பதிவுத்தபால் இலக்கம், திகதி என்பவற்றை குறிப்பிட்டு 021 222 2006 என்ற எண்ணுக்கு தொலைநகல் (fax) செய்து தங்களது பதிவை உறுதிப்படுத்தவேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 6714 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

(60519)

பதிவாளர்
11.05.2007

## சபிண்டீகரண அழைப்பு
## முருகேசு துரைராசா (பெரியதம்பி)

*கடந்த 15.04.2007ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (15.05.2007) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

சினட்டி, வல்வெட்டி.

குடும்பத்தினர்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் மடியில்
10 . 06 . 1951



விண்ணில் மடியில்
17 . 05 . 2005

## சின்னப்பிள்ளை சிவலிங்கம்

திதி: திரயோதசி 15.05.2007

கரவெட்டி கிழக்கு, 'லிங்கஸ்தா'னைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சின்னப்பிள்ளை சிவலிங்கம்

அன்பின் இருப்பிடமாய் ஆசையின் உறைவிடமாய் இல்லத்து அரசனாய்
எம்மை இவ்வுலகில் வாழ வழிகாட்டிய தெய்வமே!
ஊரார் போற்றிட தனியாய் நின்று உயர்ந்திட்ட ஒப்பற்ற
எம் இனிய அப்பாவே! ஆண்டு மூன்றாகி விட்டது நீ மறைந்து
ஆறாத் துயர்தனில் உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

'லிங்கஸ்தான்'
கரவெட்டி கிழக்கு, (60493)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## புலோலி கிழக்கு, பருத்தித்துறை
## பதவி வெற்றிடங்கள்

*கீழ்க்காண் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தினையும் மேலதிக விவரங்களையும் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

**01. பொதுமுகாமையாளர் பதவி - 101/07** - (சுற்று நிருபம் 31/99இற்கு அமைய)

**சம்பள அளவுத்திட்டம்** - 5500 - 130 × 10, 140 × 10 - 8200 (இத்துடன் கூ.வே ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அதிகரிப்புகளும் படிகளும் வழங்கப்படும்.

**தகைமைகள்** (சுற்றுநிருபம் 108/8 இற்கு அமைய குறியீட்டு இல 101/05 இன் படி)

அ- கூட்டுறவுப் பணியாளர் 6வது சம்பள அளவுத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்ட பதவியில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம்
அல்லது
கூட்டுறவுப் பணியாளர் 7வது சம்பள அளவுத் திட்டத்தில் மேற்குறித்த வண்ணம் 6 வருட அனுபவம்.
அல்லது,

ஆ- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றின் முகாமை மட்ட பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்
அல்லது,

இ - கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திர உயர்தரம்/ க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் 8வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**02. களஞ்சியப் பொறுப்பாளர் பதவி 202/12** - (சுற்று நிருபம் 31/99இற்கு அமைய)

**சம்பள அளவுத்திட்டம்** - 4250-80×10, 90×10-5950/- (இத்துடன் கூ.வே. ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அதிகரிப்புகளும் படிகளும் வழங்கப்படும்)

**தகைமைகள்** (சுற்றுநிருபம் 108/8 இற்கமைய குறியீட்டு இல 202/10 இன்படி)

கூட்டுறவுப் பணியாளர் 11வது சம்பள அளவுத் திட்டத்தில் களஞ்சியப் பொறுப்பாளர்/ கொள்வனவு உத்தியோகத்தர்/ கிளைமேற்பார்வையாளர்/ கிளைமுகாமையாளர் பதவியில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
கூட்டுறவு பணியாளர் 12வது சம்பள அளவுத்திட்டத்தில் அதேயொத்த பதவிகளில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்
அல்லது,
கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரத்திரம் உயர்தரம்/ க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி.
அல்லது,
கூட்டுறவு தராதரப் பத்திரம் சாதாரணம் சித்தி/ க.பொ.த. சாதாரணத்தில் கணிதம், மொழி அடங்கலாக நான்கு திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி. அத்துடன் களஞ்சியப் பொறுப்பாளர் பதவியில் 4 வருட அனுபவம்.

**பொதுவானவை.**

- வயதெல்லை 18-45 - (கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கட்கு இவ்வயதெல்லை பொருந்தாது)
- சங்க தொழிற்பரப்பில் வசிக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அனுபவம்மிக்க விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 30.05.2007 அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக தலைவர், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு தனித்தனியாக அனுப்பப்படல்வேண்டும்.

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (சி/52403)

தலைவர்,
புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்.

உரும்பிராய் ஒடையம்பதி
**கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபை**

## பொதுக்கூட்ட அறிவித்தல்

18.02.2007ஆம் திகதியன்று நடைபெறவிருந்த மேற்படி ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 20.05.2007 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என இத்தால் உறுப்பினர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

சி.சிவராம்,
உப தலைவர்.

ந.கணேசலிங்கம்,
செயலாளர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
## சின்னத்தம்பி கந்தையா

தோற்றம்
14.07.1930

மறைவு
15.04.2007

15.04.2007 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்
சின்னத்தம்பி கந்தையா

அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடன் ஓடி வந்து உதவியவர்களுக்கும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள் சாத்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி உபகாரம் செய்து இறுதிக் கிரியைகளிலும் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (15.05.2007) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பலவனார் வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (60498)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# காலத்தை இழுத்தடிப்பதற்கு புதிய உத்தி கட்டவிழ்கிறது

நாட்டின் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்துக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான வழி வகைகளை மேற்கொள்ளாமல் இழுத்தடித்து. அதேசமயம் சர்வதேச சமூகத்தையும் சமாளித்து ஏமாற்றுவதற்கு தென்னிலங்கை அரசுகள் காலத்துக்குக் காலம் பல்வேறு தந்திரோபாயங்களையும் எத்தனங்களையும் மேற்கொண்டு வந்திருக்கின்றன.

அதுவும், போரியல் வழியில் தமிழர்களை அடக்கி, இராணுவச் செயற்பாட்டின் மூலம் தான் விரும்பும் மேலாதிக்கத் திட்டத்தைத் தீர்வாகத் தமிழர் மீது திணிப்பதற்கு கங்கணம் கட்டி, துடியாய்த் துடிக்கும் மஹிந்தரின் அரசோ இந்த ஏமாற்றுத் தந்திரோபாயத்தில் வெகு சாமர்த்தியமாக - சாணக்கியமாக - காய்களை நகர்த்த முயல்கிறது.

இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு என்ற அழுத்தம் சர்வதேச சமூகத்திடம் இருந்து வரும்போதெல்லாம் அதனைச் சமாளிக்க கொழும்பு அரசுகள் முதலில் மேற்கொள்ளும் நடவடிக்கை சர்வகட்சி மாநாட்டையோ, வட்ட மேசை சந்திப்பையோ, அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவையோ அல்லது அது போன்ற பிறிதோர் அமைப்பையோ ஸ்தாபிப்பதுதான். இலங்கை இனப்பிரச்சினை மிக மோசமான போராக உருவெடுத்த இந்த முப்பது ஆண்டு காலத்தில் கொழும்பில் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருந்த தென்னிலங்கைத் தலைவர்கள் எல்லோரும் மேற்கொண்ட தந்திரம் இதுதான். முன்னாள் ஜனாதிபதிகள் ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ஆர்.பிரேமதாஸா, சந்திரிகா குமாரதுங்க முதல் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரை கையாண்ட உத்தி இதுவே.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தேடுகின்றோம் என்ற பெயரில் இந்த வட்டமேசை மாநாடுகளும், சர்வ கட்சிக் கலந்துரையாடல்களும், அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டமும் காலத்தைக் கபளீகரம் செய்துகொண்டு போக, அரசுத் தலைவர்கள் தங்கள் ஆட்சிக்காலத்தை மறுபுறத்தில் வெற்றிகரமாகக் கொண்டிழுத்து விடுவார்கள்.

இருட்டறைக்குள் - இல்லாத - கறுப்புப் பூனையைத் தேடியலையும் குருடன் போல இந்த சர்வகட்சிக் கூட்டங்கள் கூடிப் பேசிப் பயனின்றிக் கலைவதுதான் மிச்சம்.

தாம் ஆட்சிக்கு வந்தால் தென்னிலங்கையில் பல தரப்பினருடனும் கலந்துரையாடல் நடத்தி, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தென்னிலங்கையின் இணக்கப்பாட்டை மூன்று மாதத்துக்குள் எட்டுவேன் என்று தமது 'மஹிந்த சிந்தனை' தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் தேசத்துக்கு வாக்குறுதி வழங்கியே அதிகாரத்துக்கு வந்தார் மஹிந்தர். ஆனால் இப்போது பதினெட்டு மாதங்களாகிவிட்டன. இன்னும் ஓர் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. அப்படி தெற்கில் எட்டப்படக் கூடிய இணக்கப்பாடும் தமிழர்களின் பரிசீலனைக்கு எடுக்கப்படக்கூடிய அடிப்படைத் தகுதிகளைக் கொண்டிராத வகையில்தான் அமையும் என்பதும் தெளிவாகிவிட்டது.

இந்தப் பல கட்சிகளின் கூட்டம் அல்லது வட்டமேசை மாநாடு என்ற தந்திரம் முன்னைய ஆட்சியாளர்களால் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்ட உத்தி என்பதால், அதே தந்திரோபாயத்தை மீண்டும் மேற்கொண்டு, காலத்தை இழுத்தடிக்கும் திட்டத்தை தொடர்ந்து வெற்றிகரமாக நகர்த்திச் செல்லமுடியாத இக்கட்டு உண்டு என்பதை உணர்ந்து கொண்ட மஹிந்தர் காலத்தை இழுத்தடித்து சர்வதேச சமூகத்தை ஏமாற்ற இப்போது வேறு தந்திரங்களையும் பயன்படுத்த விழைகிறார்.

முதலிலே பிரதான கட்சிகளிடையே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான கூட்டிணக்கம் என்ற கயிற்றை அவர் அவிழ்த்துவிட்டார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற முறையில் தாமும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் என்ற வகையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கூட்டு ஒப்பந்தம் செய்யும் நடவடிக்கையைப் பெரிய விவகாரமாக முன்நிறுத்தி ஆரவாரம் செய்தார். இந்தத் தடபுடல் ஏற்பாடுகள் எல்லாம் சில மாதங்கள் இழுத்தடிக்க அவருக்கு உதவின. ஆனால், பதவி ஆசைக்காக அலையும் ஒன்றரை டசின் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தம் பக்கம் தாவவைப்பதற்கு இந்தப் பிரதான கட்சிகளிடையேயான இணக்கப்பாடு அவருக்கு உதவ, தமது ஆட்சி அதிகாரத்தை வலுப்படுத்தும் அந்த நடவடிக்கைக்காக பிரதான கட்சிகளிடையேயான இணக்கப்பாட்டை அதற்குப் பலி கொடுத்தார் அதிபர் மஹிந்தர்.

ஆக, சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டம், பிரதான கட்சிகளிடையேயான இணக்கம் என்றெல்லாம் ஜனாதிபதி மஹிந்தர் மேற்கொண்ட தந்திரங்கள் வெறும் கால இழுத்தடிப்பு எத்தனங்களே என்ற சாயம், சர்வதேச சமூகத்தின் முன்னால் இப்போது வெளுத்துவிட்டது. குறுகிய அரசியல் நோக்கங்களுடனான இந்த நகர்வுகள் உண்மையில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்கோ,- இலக்கோ கொண்டவையல்ல என்ற யதார்த்தம் சர்வதேச சமூகத்துக்கு நன்கு புரிந்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்டுள்ள மஹிந்த அரசு இப்போது புதிய தந்திரோபாய நகர்வு ஒன்றை ஆரம்பித்திருக்கின்றது.

அதுதான் -

தேசிய இனப்பிரச்சினையை ஒன்றுபட்டு அணுகுவதற்காக 'தேசிய அரசு' ஒன்றை அமைக்கும் முயற்சி என இப்போது தென்னிலங்கை ஊடகங்கள் ஊடாகக் கசியவிடப்பட்டிருக்கும் தகவலாகும்.

அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் கூட்டம், பிரதான கட்சிகளிடையேயான நல்லிணக்கம் என்ற விடயங்கள் அறிவிக்கப்பட்ட சமயம், இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் அவை முக்கிய பெரும் நகர்வுகள் என்று எடுத்த எடுப்பிலேயே ஏற்றுக்கொண்டு ஏமாந்த சர்வதேச சமூகம், இப்போது 'தேசிய அரசு' பற்றிய பேச்சு வெளிப்பட்டதும், அமைதித் தீர்வுக்கான புதிய பாதையை அந்த முயற்சி திறந்துவிடும் என்று அதையும் மலைபோல நம்பும் என்பது திண்ணம்.

ஆக, காலத்தை இழுத்தடிக்கும் தென்னிலங்கைத் தந்துரோபாயத்தின் மற்றோர் அத்தியாயமாக தேசிய அரசு என்ற எத்தனம் இப்போது கட்டவிழ்கிறது.

இத்தகைய மாயமான்களைக் கவனத்தில் கூட எடுக்கும் மனநிலையில் தமிழர் தரப்பு இல்லை. அதை சர்வதேச சமூகம் நேரத்துடன் புரிந்து கொள்வது நல்லது.

# இனரீதியில் நாடு பிளவுபடுமானால் 'சிங்களப் பிரபாகரன்' தோன்றுவார்

## சென்னையில் ஜே.வி.பியின் சந்திரசேகரன்



சென்னை,மே15

இனரீதியில் நாட்டைப் பிரிக்காத நிலையில் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதையே ஜே.வி.பி. விரும்புகின்றது. அவ்வாறான பிரிவினையானது தமிழருக்கு ஆபத்தாகவே முடியும். இலங்கை பிளவுபடுமானால் 'சிங்களப் பிரபாகரன்' ஒருவர் தோன்றுவதற்கும் அது வழிவகுக்கும்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான ஆர்.சந்திரசேகரன் சென்னையில் 'இந்து' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைநாடு சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம்களுக்குச் சொந்தமானது என்று ஜே.வி.பி. நம்புகின்றது. பல இனங்களையும் பல கலாசாரங்களையும் கொண்ட நாட்டை பிரிப்பதானது மேலும் பல உப தேசிய பிரிவினைகளுக்கு வழிகோலுவதுடன் நாடு பல துண்டுகளாகப் பிரிவதற்கான ஆபத்தையும் ஏற்படுத்தும் - என்றார்.

இனப்பிரச்சினையைக் காட்டிக்கொண்டு குறிப்பாக தமிழர்களுக்குத் தனியான என்பதனை முன்வைத்து இலங்கையின் விவகாரங்களின் பிரிட்டன், நோர்வே மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் தலையிட முனைகின்றன. இலங்கையில் எண்ணெய் வளத்தைச் சுரண்டும் உள்நோக்கத்துடனேயே அவை இவ்வாறு செயற்படுகின்றன - என்றார். (அ-ப)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகக் காவலாளி சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,மே15

சண்டிலிப்பாய் பிரதேச செயலகக் காவலாளி நேற்று நள்ளிரவு 12 மணியளவில் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த நாகராசா விஜயகுமார்(வயது 32) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் ஆவார்.

மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

சம்பந்தப்பட்டவரைத் தாம் நிற்குமாறு கேட்டபோதும் அவர் தப்பி ஓடினார் என்றும் -

அவரிடம் இருந்து கிரனேட் மீட்கப்பட்டது என்றும் - படைத்தரப்பினர் விசாரணையில் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

# நயினை நாகபூஷணி பெருந்திருவிழாக் கூட்டம்


யாழ்ப்பாணம்,மே15

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா தொடர்பான ஒழுங்குகளை ஆராய்வதற்கான முன்னேற்பாட்டுக் கூட்டம் இன்று காலை பத்து மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பஸ்போக்குவரத்துச் சேவை, கடற்படையிரின் சோதனை, கப்பல் போக்குவரத்து வசதி, கப்பலில் செல்லும் 16 வயதுக்குட்பட்டவர்களுக்கான தற்காப்பு அங்கி, சுகாதாரம், குடிதண்ணீர் மற்றும் பிரச்சினைகள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

நாகபூஷணியம்மன் ஆலய பெருந்திருவிழா அடுத்த மாதம் 16ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது. (அ-95)

# நோர்வே தமிழ்ப் பிரஜை இலங்கையில் மாயம்!



ஒஸ்லோ, மே 15

நோர்வே பிரஜையான தமிழர் ஒருவர் கடந்த மார்ச் 31ஆம் திகதியிலிருந்து காணாமற்போயுள்ளார். இறுதியாக வவுனியாவில் இராணுவத்தினரால் விசாரிக்கப்பட்டதன் பின்னர் இவர் காணாமற் போயுள்ளார் என்று நோர்வே பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுந்தர்ராஜன் தம்பிராஜா (வயது 31) என்ற நபரே காணாமற்போனவராவார்.

இவர் 1993 முதல் நோர்வேயில் வசித்து வருகின்றார். திருமணத்திற்காக இலங்கைக்கு வருகை தந்த இவர், 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஏ-9 வீதி மூடப்பட்டதைத் தொடர்ந்து வன்னிக்குள் அகப்பட்டுக்கொண்டார்.

மார்ச் மாதம் 31ஆம் திகதி கொழும்பு வருவதற்காக அவர் ஓமந்தைச் சாவடிக்கு வந்தார் என்று அந்தப் பத்திரிகை தெரிவிக்கின்றது. அவரது குடும்பத்தினர் நோர்வேயில் தங்கி இருக்கின்றனர். அவரைக் கண்டு பிடிப்பதற்கு குடும்பத்தினரும் கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தினரும் கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

தம்பிராஜாவின் விடுதலையைப் பாதிக்கக்கூடும் என்பதால் இந்தத் தகவலை வெளியே விடாமல் அவரது குடும்பத்தினர் மௌனமாக இருந்தனர். நோர்வப் பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது. இந்த விடயம் தொடர்பாக நோர்வே வெளிவிவகார அமைச்சும் தீவிர ஈடுபாடுகாட்டி வருகின்றது எனவும் அந்தப் பத்திரிகை கூறியுள்ளது. (சி)

# ஐ.தே.கவுடன் இணைந்து தேசிய அரசு அமைக்க ஜனாதிபதி விரும்பமாம்

கொழும்பு,மே15

தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்ற கருத்தை ஜனாதிபதி ராஜபக்ஷ வரவேற்றுள்ளார்.

தேசிய அரசு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி சிரேஷ்ட உறுபினர்கள் சிலர் தெரிவித்துள்ள கருத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவேற்றுள்ளதன் மூலம் நாட்டின் அரசியல் கள நிலையில் மேலும் ஒரு திருப்பம் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாக்கியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

குருநாகல் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு சிரேஷ்ட ஐ.தே.க. அரசியல்வாதி தேசிய அரசு அமைக்கப்படவேண்டும் என்ற கருத்தினை கடந்த ஜனவரியில் அரசுத் தரப்புக்கு மாறி இப்பொழுது அமைச்சராகவிருக்கும் ஒரு முன்னாள் ஐ.தே.க உறுபினரிடம் முதன் முதலில் தெரிவித்திருந் தார்.

தேசிய இனப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இரு கட்சிகளிடமும் தெளிவான அணுகுமுறை இல்லையென்று தெரிவித்துள்ள அந்த அரசியல் பிரமுகர் இதன் காரணமாக தேசிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புதிய தீர்வுத் திட்டமொன்றின மூலம் புதிய முயற்சி எடுக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்திருந்தார். இந்த வகையில் ஜனாதிபதியுடன் ஓர் உடன்பாட்டை செய்துகொள்வதற்கான முன்முயற்சிகளை எடுக்கும்படி அமைச்சராகவிருக்கும் முன்னாள் ஐ.தே.கட்சி உறுப்பினரிடம் அவர் கேட்டிருந்தார்.

ஆனால் தாமும் அரசாங்கத்தில் ஒரு புதிய உறுப்பினராகவிருப்பதால் ஐ.தே. கட்சியின் உயர் மட்டத்தில் அப்படியான ஒரு செயற்பாட்டுக்கு முன் இணக்கம் இருந்தால் மட்டுமே ஜனாதிபதியுடன் தாம் இவ்விடயம் பற்றி எடுத்துக் கூறமுடியும் என்று முன்னாள் ஐ.தே.க. உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி அமைச்சருடனான ஒரு சந்திப்பின் போது தேசிய அரசு அமைப்பதற்கு தமக்குள்ள இணக்கப்பாட்டை வெளியிட்டுள்ள ஜனாதிபதி ராஜபக்ஷ இந்த விடயத்தை முதலில் தெரிவித்த ஐ.தே.க. உறுப்பினர்களிடம் தமது சம்மதத்தை தெரிவிக்கும்படியும் கூறியுள்ளார் என்று அறியப்படுகிறது.

கடந்த வருடம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாட்டை எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கூட்டு முயற்சியில் ஈடுபடுவதற்கென பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டது. ஆனால், ஐ.தே. கட்சியில் இருந்து 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத் தரப்பிற்கு மாறியதால் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து ஐ.தே.கட்சி விலகிக் கொண்டது. (அ-ப)

# ஊடகவியலாளர் சிவராமின் கொலை வழக்கு ஜூலைக்கு ஒத்திவைப்பு

## அரதரப்புச் சாட்சிகள் சமுகமளிக்காததால்

கொழும்பு,மே15

ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் கொலை வழக்கு அரசுத் தரப்பு சாட்சிகள் நீதிமன்றுக்கு சமுகம் தராத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று கொழம்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி டபிள்யூ.ஏ.ரி. இரத்திநாயக்கா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் ஏப்ரல் 28ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் தர்மரத்தினம் சிவராமைக் கடத்திச் கொலை செய்யத் திட்டமிட்டார் எனவும் கொலைசெய்தார் எனவும் இந்த வழங்கில் ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தராஜா(பீற்றர்) என்பவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது.

எதிரித் தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க சிங்களம் பேசும் ஜூரர்கள் முன்னிலையில் இந்த வழக்கு விசாரிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று இந்த வழக்கு அழைக்கப்பட்ட போது பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த எதிரி நீதிமன்றத்தில் ஆஜ ரானார்.

அரசுத்தரப்பு சாட்சிகள் பலர் நீதிமன்றுக்க சமுகம் தரவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து நீதிபதி வழக்கை ஜூலை 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (சி)

# கொள்ளையில் ஈடுபட்டவரின் பொய்க்காலுக்குள் நகைகள்!

## வவுனியா பண்டாரிக்குளத்தில் கைதானவரிடம்

வவுனியா,மே15

வவுனியா நகரில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பண்டாரிக்குளம் பகுதியில் கொள்ளையில் ஈடுபட்ட மூவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவரின் பொய்க்காலுக்குள் இருந்து பொலீஸார் நகைகளை மீட்டனர்.

சனிக்கிழமை நள்ளிரவுவேளை அந்தப் பகுதியில் உள்ள வீடுகளில் போலித் துப்பாக்கியைக் காட்டி ஒரு கோஷ்டி கொள்ளையில் ஈடுபட்டது.

நான்கு வீடுகளில் கொள்ளையில் ஈடுபட்ட பின்னர் ஐந்தாவது வீட்டில் [illegible]ன் கொள்ளையில் ஈடுபட [illegible]ந்தவேளை, பொலீஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டனர்.

இக்குழு கொள்ளை நடவடிக்கையில் ஈடுபட்டவேளை, அப்பகுதி மக்கள் பொலீஸாருக்கு உடன் தகவல் கொடுத்தனர்.

பொலீஸ் கோஷ்டி அப்பகுதியை சுற்றி வளைத்து சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதான மூவரில் ஒருவர் பொய்க்கால் பொருத்தப்பட்டிந்தார். அவரின் பொய்க்காலில் இருந்து, ஏற்கனவே வீடுகளில் கொள்ளையிடப்பட்ட நகைகள், பணம் ஆகியன பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

பிரஸ்தாப நபர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுவருகின்றனர். (அ-1)

# நாளை

| | |
|---|---|
| வைகாசி - 2 | புதன்கிழமை 16.05.2007 |
| திதி: அமாவாசை பின்னிரவு : 01.36 | |
| நட்சத்திரம்: | பரணி பிற்பகல் : 05.13 |
| சுபநேரம் | : 04.23 - 05.53 |
| ராகுகாலம் | : 11.53 - 01.23 |

அமாவாசை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிர்காமர் கொலை வழக்கு:

# மேலும் தாமதமின்றி விசாரணைகளை ஆரம்பிக்க சட்டமா அதிபருக்கு நீதிபதி உத்தரவு

கொழும்பு, மே 15

கதிர்காமர் கொலை வழக்கை மேலும் தாமதப்படுத்தாமல் விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபருக்கு கொழும்பு பிரதம நீதியரசர் குசல சரோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டார்.

மேற்படி விவகாரம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் ஐவரும் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் ஐவரும் கதிர்காமர் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னரே கைதானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சட்ட ரீதியான விசாரணை ஏதுமின்றி, விளக்கமறியலில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தாங்கள் சிறைவைக்கப்பட்டிருப்பது பெரும் அநீதியென அவர்கள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

அதனைத் ஏற்றுக்கொண்ட நீதிவான், ஆனால் இது விடயத்தில் தம்மால் ஏதும் செய்ய இயலாது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

எனினும், இவ்விடயத்தை துரிதமாக முடிக்கும்படி அவர் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டார்.

குற்றப்பத்திரம் தாக்கல் செய்து வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு ஏதுவாகச் செயற்படும்படி உத்தரவிட்ட நீதிபதி பின், வழக்கை அடுத்த 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# ஜோதிடர் சுட்டுக்கொலை

கொழும்பு, மே 15

கொழும்பு மாவட்டம் பொரலஸ்கமுவ பகுதியில் ஜோதிடர் ஒருவர் அடையாளம் தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் அவரது வீட்டில் இந்தப் படுகொலை இடம்பெற்றிருக்கிறது.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரான கம்புருகமுவ வித்தியாராச்சிகே சரத் குமார (வயது - 47) என்பவரே கொல்லப்பட்டிருக்கிறார்.

பிரபல சோதிடரான இவர் வெளியூர் பயணங்களை மேற்கொள்வோருக்கு ஜோதிடம் கூறிவந்தவர் என்றும், பலரும் வெளிநாடு செல்வதற்கு ஜோதிட ஆலோசனையை வழங்குபவர் என்றும் பொலிஸாருக்குத் தெரியவந்துள்ளது. (சி)

## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரிவுரையாளர்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை-

யாழ்ப்பாணத்தில் முக்கிய பாடசாலைகளைச் சேர்ந்த உயர்தர மாணவர்கள் நால்வர் ஊரடங்கு இரவில் ஆயுதம் தரித்தவர்களால் வீடுகளில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டிருந்தனர்.

கடத்தப்பட்ட மாணவர்களை விடுவிக்குமாறு கேட்டு பாடசாலை மாணவர்களும் உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர்களும் கடந்த சில தினங்களாக பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே.

**நான்காவது நாள்**

குடாநாட்டுப் பாடசாலைகளில் நேற்று நான்காவது நாளாகவும் பகிஷ்கரிப்புத் தொடர்ந்தது. முதல் மூன்று நாள்களையும் விட நகரப் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிகப் பெரிய அளவில் குறைந்து காணப்பட்டது.

எனினும் கிராமங்களில் உள்ள சில பாடசாலைகளில் சுமாரான மாணவர் வரவு காணப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

பகிஷ்கரிப்பு தொடரும் அறிகுறிகள் அதிகம் காணப்படுவதால், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகள் விரைவில் முடங்கிவிடும் ஆபத்து உண்டு என சுட்டிக்காட்டப்படுகிறது.

யாழ். நகரின் சில முக்கிய பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர் எனக் குற்றஞ்சுமத்தி, அவர்களுக்கு இறுதி எச்சரிக்கை வெளியிட்டு, அவர்கள் பயங்கரவாதிகளுடன் சேர்ந்து மேலும் நாசகார வேலைகளில் ஈடுபட்டால் அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும் என்று அறிவிக்கும் துண்டுப்பிரசுரம் 'நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு யாழ். மாவட்டம்' என்ற பெயரில் கடந்த வாரம் குடாநாட்டில் பரவலாக விநியோகிக்கப்பட்டது தெரிந்ததே. (அ-சி)

## பத்திரிகைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்துகொள்வது கிடையாது.

அரசில் குறைபாடு உள்ளது. அதேபோல் அரசை விமர்சிப்பது அவசியமாகும். எனினும், நியாயமற்ற முறையில் அரசை விமர்சிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு உள்ளான பிரதேசங்களை விடுவித்தோம். அந்தப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்த மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கையை அரசு ஆரம்பித்துள்ளது.

நாட்டில் ஊடக சுதந்திரம் இல்லை என்று சிலர் விமர்சித்து வருகிறார்கள். எனினும், வாரந்தோறும் - நாள் முழுவதும் - என்னைப் பத்திரிகைகள் விமர்சிக்கின்றன. அதுதொடர்பாக நான் எதுவும் கேட்பதில்லை. அதைப் பொறுத்துக்கொண்டிருக்கிறேன். அப்படியிருக்க, நாட்டில் ஊடக சுதந்திரம் இல்லை என்று கூறினால் அது எப்படி நியாயமாகும் என்று - ஜனாதிபதி தெரிவித்தார். (சி)

## மாணவர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவோ கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கவோ முடியாமல் பெரிதும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளனர்.

**அரசே பொறுப்பேற்கவேண்டும்**

இது தொடர்பாகச் சென்ற 10. 05. 2007 ஆம் திகதி ஜனாதிபதியை உடன் தலையிட்டு கடத்தப்பட்ட மாணவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி கடிதம் அனுப்பியதுடன் தொடர்புகளையும் ஏற்படுத்தியிருந்தேன். ஆனால் இதுவரை ஜனாதிபதியோ அரசோ மாணவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும்.

ஏற்கனவே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் கல்வியை மேலும் சீரழிக்கும் இத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தி எம் எதிர்காலச் சந்ததியினரின் கல்வி மேம்பாட்டுக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்றவேண்டும். மாணவர்களைக் கடத்தியதனால் மாணவர்கள் அதற்கெதிராகப் போராட்டங்களைத் தொடர்வது தவிர்க்கமுடியாதுள்ளது.

எனவே, கடத்தப்பட்ட மாணவர்களை விடுவிக்கவும் தமிழ் சமூகத்தின் கல்வியை சுமுகமான முறையில் முன்னெடுப்பதற்கும் அமைதியான வழிமுறைகளில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும், போராட்டங்களுக்கும் கல்விச் சமூகமும் பொது மக்களும் ஆதரவு வழங்கவேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## தனது தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் அடையாளமாக நாம் முன்வைத்திருக்கும் யோசனைகளை இப்போது மாற்றியமைக்கத் தேவையில்லை'' என்றும் ஜனாதிபதி சொன்னார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல் தீர்வு யோசனைக்கு ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்திருப்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

சு.க. யோசனைக்கு எதிராக நாடளாவிய ரீதியில் போராட்டங்களை நடத்தவும் ஜே.வி.பி. முடிவு செய்திருக்கிறது.

தேசியப் பிரச்சினைக்கு ஒற்றை ஆட்சியின்கீழ் தீர்வு காணப்படும் என்றே மஹிந்த சிந்தனையில் வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதற்கே மக்கள் ஆணை வழங்கினார்கள்.

ஆனால் சுதந்திரக் கட்சியின் யோசனை ஒன்றியம் முறைக்கு முதன்மை இடம் வழங்கியிருக்கிறது - என்று தெரிவித்து ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியும் ஒற்றையாட்சி முறையின் கீழேயே இனப் பிரச்சினைத் தீர்வு அமையவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது. அந்த அடிப்படையிலேயே தனது யோசனை வகுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்தக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனைகள் குறித்து அதிருப்தி வெளியிட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும். (அ-சி)

## மர்ம விமானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறப்படுகிறது.

இதனையடுத்தே கேகாலை பொலிஸார் சம்பந்தப்பட்ட மலைப் பகுதியில் தேடுதல் நடத்தினர். எனினும் விமானம் எதுவும் தரையிறங்கியமைக்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. 'ராடர்' கருவிகளிலும் அத்தகைய மர்ம விமானம் தென்பட்டதாகத் தகவல் இல்லை என்றும் கேகாலைப் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது. பாதுகாப்பு முன்னரங்கப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து படையினர் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் அது மேலும் தெரிவித்தது.


**விசேட விலைக் கழிவில்...**

★ கையடக்கத் தொலைபேசிகள் உத்தரவாதத்துடன் குறைந்த விலையில் விரும்பிய மொடல்களில் பெற்றுக் கொள்ளவும்

(தமிழில் தகவல்களை பரிமாறக் கூடிய வசதிகள் உண்டு)

★ GSM மேசைத் தொலைபேசிகள் தொக்கிய பற்றி - 600/=

★ கையடக்கத் தொலைபேசி உதிரிப்பாகங்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ளவும்







★ சிறந்த முறையில் கையடக்கத் தொலைபேசிகளை பழுது பார்த்திடவும் நாடவேண்டிய இடம்.

★ டயலொக் கைத் தொலைபேசிகள்... பில் (Bill) கொடுப்பனவுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.







**நியூ பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி**

205/01, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்
(ராஜா தியேட்டருக்கு அருகில்)
தொலைபேசி: 0773 518330, 0776660289
இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.



**காரிநுவில் ஓராண்டு**



**செல்வி லாவண்யா மாணிக்கம் (யசோ)**
(உயர்தர மாணவி)

மலர்ந்தது 02-01-1987 உதிர்ந்தது 15-05-2006

திதி: அபரபட்ச துதியை 02.06.2007

கண்ணால் சிரித்து கரும்பு மொழி பேசி
சின்னஞ்சிறு காலால் அன்னநடை நடந்து
நீ சிரித்து வளர்கையிலே எம் வீடே சிரித்ததம்மா
சிரிக்க, சிரிக்க நீசெல்லக் கதை பேசி
இருந்த அக்காலம் இப்போது எம் நெஞ்சில்
உயிர்த்தெழுந்து வந்து உணர்வைக் குடிக்குதம்மா
இறுதிவரை எம்மோடு இணைந்திருப்பாய் என்றிருந்தோம்
கண்ட கனவுகள் நனவாகும் முன்பே - இடை நடுவே
எமைத் தவிக்கவிட்டுகாலனவன் ஏன் பறித்தான்?

(60517)

614/3, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
- குடும்பத்தினர்.



**CHEMISTRY (GROUP CLASS)**
**2009 A/L**
ஒட்சியேற்றமும் தாழ்த்தலும்
By DIAS B.Sc (Hons)
ஆரம்பம் (16.05.2007)
WED. 6.30 A.M.
College Of Chemistry
பரமேஸ்வரா வீதி, நல்லூர்.



**ஏசியன் கல்வி நிலையம் மீசாலை**
O/L Day CLASS
பிரிவு II
ஆரம்பமாகிவிட்டது.
நிர்வாகி.



**கணக்கீடு கருத்தரங்கு**
அலகு: 01 ஆரம்பம்
தொடர் கருத்தரங்கு
NEW SCIENCE HALL
புதன் 9 A.M.
SHAMROCK TUTITION CENTRE
புதன் 1 P.M.
NIRU TUTITION CENTRE
புதன் 3.30 P.M.
UNIVERSAL TUTITION CENTRE
வெள்ளி 8 A.M.
S. தவா
B.Com. (Hons) (Acc.spl.)


## மரண அறிவித்தல்கள்



### நடராசா நாகராசா

மூளாய் தெற்கு, மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா நாகராசா 05.05.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா - மகேஸ்வரி தம்பதியரின் மூத்த மகனும் கலாநிதியின் அன்புக் கணவரும் பத்மதீபன், சுபாஜினி, ஜனனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருத்திகாவின் அன்பு மாமனும் அரவிந்தின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் தெற்கு,
சுழிபுரம்.
(60550)
தகவல்:
குடும்பத்தினர்.



### கிருஷ்ணபிள்ளை கனகராஜன்
(கனெக்ஸ்)

வதிரி, காரைப்பாதியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் தில்லையம்பதியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை கனகராஜன் நேற்று (14.05.2007) காலமாகிவிட்டார்.

அன்னார் கிருஷ்ணபிள்ளை - கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் கௌசலாவின் அன்புக் கணவரும் பிறின்சிகாவின் பாசமிகு தந்தையும் முத்துலிங்கம் (யாழ். மாநாகரசபை ஊழியர்), சந்திரமலர் தம்பதியரின் மருமகனும் சுந்தரராஜன், கிருஷ்ணகுமாரி (கண்ணன்) ஆகியோரின் சகோதரனும் ஜெயகாந்தன், தீபன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2007) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் கோண்டாவில் தில்லையம்பதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்துமாரி அம்மன் ஒழுங்கை,
தில்லையம்பதி கோண்டாவில்.
(60550)
தகவல்:
மு. தீபன் (மைத்துனர்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org